

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் வாணியந்தல் ஆறுமுகம், கள்ளக்குறிச்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் அலமேலு ஆறுமுகம் இல்ல திருமணத்தை அமைச்சர் எ.வ.வேலு தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார், அருகில் தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தா.உதயசூரியன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் அங்கையற்கண்ணி ஆகியோர் உடன் உள்ளனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம் பெருந்துறை தெற்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் கே.பி.சாமி தலைமையில் மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு வருகிற சட்டமன்ற தேர்தலில் கழக உடன்பிறப்புகள் களப்பணிகள் ஆற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார், கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் உள்ளிட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கோயம்புத்தூர், நீலகிரி திருப்பூர் மாவட்டத்திலுள்ள

# ஆதிதிராவிடர் கல்லூரி விடுதி மாணவர்களுக்கு தொடுவானம் விழிப்புணர்வு நிகழ்ச்சி!

## அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் தொடங்கி வைத்தார்!

கோவை, செப்.8-

கோயம்புத்தூர் மாவட்டம், ஆர்.எஸ்.புரம் கலையரங்கத்தில் நேற்று முன்தினம் (06.09.2024) தாட்கோ மூலமாக கோயம்புத்தூர் நீலகிரி மற்றும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்களுக்கு தொழில் மற்றும் உயர்கல்வி பயிலகம் தொடர்பான தொடுவானம் விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழிசெல்வராஜ் அவர்களின் தொடங்கி வைத்து, தொடுவானம் கருத்தரங்கு புத்தகத்தை மாணவ மாணவியர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்,(தாட்கோ) தலைவர், உ.மதிவாணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர், திருமதி.க. லட்சுமிபிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர், கிராந்தி குமார்பாடி, பழங்குடியினர் நலஇயக்குநர் ச.அண்ணாதுரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி.ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் உதவி ஆட்சியர்(பயிற்சி) அங்கித் குமார் ஜெயின், மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், தூய்மைப் பணியாளர் நலவாரிய மாநில துணைத் தலைவர் திருமதி. கனிமொழி, மாமன்ற உறுப்பினர் கார்த்திக் செல்வராஜ், தாட்கோ பொதுமேலாளர் (திட்டம்), என். ஸ்ரீனிவாசன் மற்றும் உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கு முன்பாக தாட்கோ சார்பாக செயல்படுத்தப்படும் திறன் மேம்பாட்டுக் பயிற்சிகள் தொழில்முனைவோர் திட்டம், மற்றும் கட்டுமான பிரிவு தொடர்பான கண்காட்சி அரங்கத்தை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் தொடங்கி வைத்து பார்வையிட்டார். தொடர்ந்து, பழங்குடியினர் தங்களது உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த, tribalmart, இணையதளத்தை தொடங்கிவைத்து, மெட்ராஸ் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜியில் B.S. data science பட்டப்படிப்பு பயில்வதற்கு தேர்வு செய்யப்பட்ட மாணவிகளுக்கு சேர்க்கைக்கான ஆணையினை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்ததாவது,

ஆதிதிராவிடர்மற்றும் பழங்குடியின மாணாக்கரின் கல்வி மேம்பாட்டில் தனிகவனம் செலுத்துவதன் மூலம் அவர்களின் கல்வி, தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைதிறன் போன்ற செயல்திறன்களை உயர்த்துதல் நோக்கத்தில் இத்துறை செயல்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உயர்நிலை அடைய வேண்டி அரசு மற்றும் தனியார் வங்கி போட்டி தேர்வுகளை எதிர்கொள்வதற்கான பயிற்சி, மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்திற்கான பயிற்சி, போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதற்கான AMCAT போன்ற பல்வேறு பயிற்சிகள் மற்றும் தொழில்முனைவோருக்கான விழிப்புணர்வும் தாட்கோ மூலமாக வழங்கப்படுகிறது.

இத்தொடுவானம் நிகழ்ச்சியின் மூலம் ஆதிதிராவிட கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் 750 மாணாக்கர்களுக்கு தொழில் மற்றும் உயர்கல்வி பயிலகம் தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க அரசின் சார்பில் 35 சதவீதம் மானியம், 65 சதவீதம் வங்கிகள் மூலம் கடனுதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பழங்குடியின மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தை படுத்துவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்தது. ஆனால், அவர்கள் தயாரிக்கும் பொருட்களை சந்தை படுத்தும் வகையில் இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது இத்திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகின்றது. அண்ணல் அம்பேத்கர் தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ் ரூ.1கோடி வரை கடனுதவிகள் வழங்கப்படுகின்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தொழில்முனைவோர் கண்காட்சி கடந்த ஆண்டு இரண்டு நாட்கள் நடத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் இதுபோன்ற கண்காட்சியினை நடத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, இந்த ஆண்டும் நடத்தப்படவுள்ளது. இந்த காலக்கட்டத்தில் போட்டிகள் போடுவதற்கு நிறையபேர் இருக்கின்றார்கள். ஒவ்வொருத்தருக்கும் வாய்ப்புகள் வேண்டும். ஆனால் நம்முடைய துறையை பொறுத்தவரையில் வாய்ப்புகள் கொட்டி இதுபோன்ற கிடக்கின்றன. அதனை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றீர்கள் என்பதை பொறுத்துதான் உங்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடையும். போட்டிகள் அதிகம் நிறைந்த இந்த காலகட்டத்தில் நாம் வெற்றி பெற நாம் அதிக உழைப்பை கொடுத்தாக வேண்டும். நமக்கென தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வெற்றி பெறமுடியும். வாய்ப்புகளை நீங்கள் நன்றாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும். பெற்றோர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்து உங்களை படிக்க வைக்கின்றார்கள். நீங்கள் நன்றாக படித்து நல்ல தொரு வேலைவாய்ப்பினை பெற்று நல்லநிலைக்கு வருவதுதான் அவர்களுக்கு பெருமையாக இருக்கும்.

சமூகத்தின் இதரபிரிவினருக்கு இணையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை கல்வி அறிவு மற்றும் சமூகபொருளாதார நிலையில் உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படும் தாட்கோ ஆனது ஆதிதிராவிட கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்களுக்கு தொழில் மற்றும் உயர்கல்வி பயிலகம் தொடர்பான தொடுவானம் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் மாணாக்கர்களின் எதிர்காலம் வளம்பெறும் என் அமைச்சர் திருமதி.என். கயல்விழிசெல்வராஜ் தெரிவித்தார்.

### ரூ.2 கோடி நிலத்தை வழங்கிய

# சோழபுரம் ஷாஜஹானுக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, செப். 8-

தஞ்சாவூர் மாவட்டம் சோழபுரம் காவல் நிலையத்திற்காக 2 கோடி ரூபாய் மதிப்பிலான தனது இடத்தை வழங்கிய ஷாஜஹான் அவர்களை பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**"ஈத்துவக்கும் இன்பம்" என வள்ளுவர் குறிப்பிட்டதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழும் ஷாஜஹான் அவர்களின் தன்னலங்கருதா மனதுக்கு எனது பாராட்டுகளும் நன்றியும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.



ஈரோடு வடக்கு மாவட்டம் டி..என்.பாளையம் ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் எம்.சிவபாலன் தலைமையில் மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் கலந்து கொண்டு வருகிற சட்டமன்றத் தேர்தலில் களப்பணிகள் ஆற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், அவைத்தலைவர் ஏ.பெருமாள்சாமி, கே.கே.சண்முகம், கார்த்திகேயன், திருமதி ஆசிர்வாதம் உள்ளிட்ட பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

